**செய்தி வெளியீடு எண் : 1760** **நாள் : 08.10.2022**

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் ரூ.4.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை இன்று (08.10.2022) நேரில் ஆய்வு செய்தார்கள்**

---

தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில், அயோத்திதாசப் பண்டிதருக்கு திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கும் பணி, வ.உ.சிதம்பரனார் செக்குடன் கூடிய மண்டபம் பொலிவூட்டுதல் மற்றும் அன்னாருக்கு மார்பளவு சிலை அமைக்கும் பணி, வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலை அமைக்கும் பணி, சிவகங்கை சீமையை ஆண்ட மருது சகோதரர்களின் திருவுருவச்சிலை அமைக்கும் பணி மற்றும் காந்தி அருங்காட்சியகமும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம்.பக்தவத்சலம் மணிமண்டபமும், பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபமும் புதுப்பிக்கும் பணி ரூ.4,92,18,579/- மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திட்டப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (08.12.2022) நேரில் ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண்.110-ன் கீழ் அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், ரூ.2,48,75,859/- மதிப்பீட்டில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் மணிமண்டப கட்டுமானப் பணிகள் தற்போது 20 சதவீதம் நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ளப்பணிகளை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக விரைந்து முடித்திட மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காந்தி மண்டப வளாகத்தில், ரூ. 43,42,720/- மதிப்பீட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாருக்கு மார்பளவு சிலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. மார்பளவு சிலை அமைக்கும் பீடம் தற்போது தயார் நிலையில் உள்ளது. சிலை வடிவமைப்புப் பணிகள் முடிந்தவுடன் அன்னாரின் சிலை நிறுவப்படும்.

தொடர்ந்து, காந்தி மண்டப வளாகத்தில் ரூ. 18,00,000/- மதிப்பீட்டில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கும், ரூ. 34,00,000/- மதிப்பீட்டில் சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்களுக்கும் திருவுருவச்சிலைகள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் சிலை வடிவமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. காந்தி மண்டப வளாகத்தில் அன்னாரின் சிலை அமையவிருக்கும் பீடம் கட்டும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. அதேபோல மருது சகோதரர்களின் சிலை வடிவமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

மேலும், காந்தி மண்டப வளாகத்தில் உள்ள காந்தி அருங்காட்சியகமும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம்.பக்தவத்சலம் மணிமண்டபமும், பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபமும் ரூ.1,48,00,000/- மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படவுள்ளது.

மேற்கூறிய பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. நவம்பர் மாத இறுத்திக்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in